# சிவில்விமானங்கள்போர்விமானங்களாகமாற்றம்


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 27 இதழ் 332
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 11—01—1992


(லண்டன்)
இலங்கையில் சிவில் விமானங்கள் போர் விமானங்களாக மாற்றப்பட்டு வடக்கு-கிழக்குப் பகுதிகளில் பயன்படுத்தப்படுவதாக அப்பகுதியில் வாழும் மக்கள் தெரிவித்ததாக பி. பி. சி. நேற்றிரவு தெரிவித்தது.
இலங்கை விமானப்படை கடந்த வாரம் பிரிட்டன் நிறு

(4-ம் பக்கம் பார்க்க)

## ஷெல் வீச்சில் இருவர் பலி

(யாழ்ப்பாணம்)
மண்டைதீவுப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் நேற்று மாலை ஆறு மணியளவில் குருநகர் பகுதியை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் காக்கைசன்துறை வீதியைச் சேர்ந்த சவுரியான் இரத்தினம் (56 வயது) என்பவர் பலியானார். மற்றொருவரோ

(4-ம் பக்கம் பார்க்க)

## தேசத்துரோக செயலில் ஈடுபட்ட மூவர் புலிகளால் கைது!

(யாழ்ப்பாணம்)
தமிழீழப் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் தேசத்துரோகச் செயல்களில் ஈடுபட்ட மூவர் தற்போது விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்கள்.
கோண்டாவிலிலுள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலகத்தில், விடுதலைப்புலிகள் மூத்த உறுப்பினர் திரு. பாவரசன் நேற்று

(4-ம் பக்கம் பார்க்க)

# பொன்னாலை பாலத்தில் புலிகளின் திடீர் தாக்குதலில் பத்து இராணுவத்தினர்மரணம்

## காவலரண்கள் தகர்ப்பு

[யாழ்ப்பாணம்]
காரைநகருக்குச் செல்லும் பொன்னாலைப் பாலத்தின்மீது அமைந்துள்ள இராணுவக் காவலரண்கள்மீது விடுதலைப்புலிகள் நடாத்திய திடீர் தாக்குதலில் பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்ததுடன் பல நவீனரக ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை 1-30 மணியளவில் விடுதலைப் புலிகளின் 'சாள்ஸ் அன்ரனி' விசேட படைப்பிரிவினர்' நடாத்திய திடீர் தாக்குதலில் பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் காவலரண்கள் சில முற்றாகத் தகர்த்தழிக்கப்பட்

[4ம் பக்கம் பார்க்க]

## பலாலி, காரைநகரிலிருந்து ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
பலாலி, காரைநகர் முகாம்களிலிருந்து நேற்று நள்ளிரவு நேரத்திலிருந்து அதிகாலை 5 மணி வரையில் பொன்னாலை, சேவளம், திருவடிநிலை, அராலி ஆகிய குடிமனைகளை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.
காரைநகர்ப் பகுதியில் இருந்து ஈரா வெளிச்சமிட்டு ஷெல் தாக்குதல்களைப் படையினர் மேற்கொண்டனர்.

[4ம் பக்கம் பார்க்க]

## வடக்கு - கிழக்கு தமிழர் சிறிதுசிறிதாக இறக்கின்றனர்

### கனடா மாநாட்டில் தெரிவிப்பு

(ஒட்டாவா)
''இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளிலுள்ள தமிழ்மக்கள் மீது அரசு விதித்துள்ள பொருளாதாரத்தடையால் அங்குள்ள மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக இறந்து கின்றனர்.''
இவ்வாறு அண்மையில் கனடா ஒட்டாவாவில் நடைபெற்ற ''மனிதாபிமான யுத்த நிறுத்தங்கள்'', மகாநாட்டில் இலங்கைக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## புல்ஜன்ஸை கடத்த காமினி திசநாயக்கா ஏற்பாடு செய்தார்

(கொழும்பு)
பேராசிரியர் பூல்ஜன்ஸை கடத்த காமினி திஸாநாயக்கா ஒழுங்குகள் செய்தார் என்று நீதிமன்றத்தில் பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் நேற்று முன்தினம் தெரிவித்தார்.
உயர்நீதிமன்றத்தில் நீதிபதி எம். உனம்புவ முன்னிலையில் சாட்சியமளிக்கையில் பேராசிரியர் பூல்ஜன்ஸ் தெரிவித்ததாவது; என்னைக் கடத்தியவர்கள் எனக்கு ஒரு தீங்கும் செய்யமாட்டார்கள் என்று கூறினார்கள். ஆனால் முன்னர்

(4-ம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ்பிரதமர் வீட்டருகில் குண்டு வெடிப்பு

(லண்டன்)
பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திலிருந்து சுமார் 300 மீற்றர் தொலைவில் சக்தி வாய்ந்த குண்டு ஒன்று நேற்று பகல் சத்தத்

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் தொண்டமான் பேசுவதில் தவறில்லை கே. பி. சில்வா

(கொழும்பு)
''அமைச்சர் தொண்டமான் இனப்பிரச்னைதீர்வு குறித்து புலிகளுடன் பேசுவதில் தவறில்லை.
இவ்வாறு இலங்கை கம்யூ

[4-ம் பக்கம் பார்க்க]

## வயதெல்லை நீடிப்பு

(கொழும்பு)
பட்டதாரிஆசிரியர்பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான வயதெல்லை நீடிக்கப்பட்டுள்ளது.
தற்போது பட்டம் பெற்றுள்ள 45 வயது பூர்த்தியான வர்களும் பட்டதாரி ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்க

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்திய அரசின் கொள்கை பற்றி நீதிவிசாரணை தேவை- கருணாநிதி.

(சென்னை)
1983ம் ஆண்டிலிருந்து இலங்கை தொடர்பான இந்திய அரசின் கொள்கை குறித்து உயர்நீதிமன்ற நீதியரசர் தலைமையில் நீதிவிசாரணை ஒன்று உடனடியாக நடாத்தப்படவேண்டுமென தி.மு.க தலைவர் திரு. மு. கருணாநிதி 'புரன்ட்லைன்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.
அப்பேட்டியில் அவர்மேலும் தெரிவிக்கையில்:
1983 ஆண்டிலிருந்து தமிழகத்தில் இலங்கைப் போராளி

(4-ம் பக்கம் பார்க்க)

## பூநகரியில் உள்ள வாகனங்களை மீட்டுதரும்படி அரச அதிபரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
பூநகரியில் அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது இருபது லொறிகள், மினி பஸ்கள், டிராக்டர்கள் உட்பட நூற்றுக்கும் அதிகமான வாகனங்களை மீட்டுத் தருமாறு வடபிராந்திய பொதிகள் சுமக்கும் வாகனங்களின் சங்கம் யாழ். அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.
வடபிராந்திய பொதிகள் சுமக்கும் வாகனங்களின் சங்கத் தலைவர் திரு. சி. அழ

(4ம் பக்கம் பார்க்க)

## அகதிகளைப் பராமரிப்பது அரசின் கடமை

(கொழும்பு)
''வடக்கு-கிழக்கில் நிலைமை சீரடைந்து, அகதிகள் தமது சொந்த இடங்களுக்குச் செல்லும்வரை அவர்களைப் பராமரிப்பது அரசாங்கத்தின் கடமையாகும்.''
இவ்வாறு நவசமசமாஜக்கட்சி ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளது. மேலும் அக்கடிதத்தில் குறிப்

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் இளைஞர்கள் விடுவிப்பு பற்றி ஆராய மாநாடு

(கொழும்பு)
பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை விடுப்பது தொடர்பாக இம்மாதம் 21ந் திகதி மாநாடொன்று நடைபெறவிருக்கிறது.
ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் திரு. பிரட்மன்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### புத்தகங்கள் வற்பனைக்கு

சவுத் ஏசியன் (இந்தியா நிறுவனத்தாரின் தரமான புத்தக வெளியீடுகள் விற்பனையாகின்றன. விபரங்களுக்கு வசந்தம் புத்தக நிலையம் 405, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்; (சி-5842)

### வேப்பெண்ணெய்

பயிர்களைத் தாக்கும் நோய்கள், பூச்சிகளைக் கட்டுப்படுத்தவும், கிருமி நாசினியாகவும், மருத்துவ தேவைகளுக்கும் வேப்பெண்ணெய் உதவுகிறது: சுத்தமான வேப்பெண்ணெய்க்கு 'மில்க்வைற்' லேபலைப் பார்த்து வாங்குங்கள்; (எ-1843)

### வரலாறு

விற்பனையாகின்றது. சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். வரலாறு- ஆண்டு II, வரலாறு- ஆண்டு 6. புதிய பாடத்திட்டத்திற்கு அமைய எழுதப்பட்டது. ஆக்கியோன்: ந: தர்மபாலன் (சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகர்.) (சி-5808)

### கலண்டர்

கண்கவர் அழகிய படங்களுடன் கூடிய கலண்டர் மலிவு விலையில் ரூபா 10/-க்கு விற்பனையாகிக்கொண்டிருக்கின்றது: ஓடருக்கும் பிறின்ட் பண்ணிக் கொடுக்கின்றோம். பெரிய கலண்டரும் உண்டு. தமிழீழ விடுமுறை நாட்களும் சேர்க்கப்பட்டுள்ளது. முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்: ஸ்ரீலங்கா அச்சகம், 234 ஏ, கே. கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்; (எ 1845)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## இன்று சாம்பியன் மோதல்

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம், அமரர் குமாரசாமி ஞாபகார்த்தமாக விளையாட்டுக் கழகங்களிடையே நடத்திவரும் 7 பேர் கொண்ட நொக்கவுட் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று அரியாலையில் நடைபெறவுள்ளது.

இறுதிச் சாம்பியன் மோதலில் பாடும் மீன் கழகமும், சென். நீக்கிலஸ் கழகமும் மோதுகின்றன. 3வது இடத்துக்கு சென். அன்ரனிஸ் கழகமும், சென். ஜேம்ஸ் கழகமும் மோதுகின்றன. (வி)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு சமூகநிலையங்களின் சமாசம் நடத்தும் 'கிராமிய அபிவிருத்தி' பற்றிய கருத்தரங்கு இன்றும், நாளையும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி இரண்டு நாட்களிலும் காலை 8-45 முதல் பிற்பகல் 4-30 வரை இக்கருத்தரங்கு நடைபெறும். (வி)

## மத்திய அரசு மீது கருணாநிதி கண்டனம்

(சென்னை)

கர்நாடகத்திலிருந்து வந்த தமிழர்கள் அந்த மாநிலத்துக்குத் திரும்பிச்சென்று அமைதியான சூழலில் வாழ்வதற்கு வேண்டிய போதுமான நடவடிக்கைகளை எடுக்க மத்திய அரசு தவறிவிட்டது என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. மு. கருணாநிதி குறை கூறியிருக்கிறார்;

அண்மையில் கர்நாடகத்திலிருந்து தப்பி ஓடி வந்த தமிழர்களுக்குத் தமிழக அரசு அடிப்படை வசதிகளை அளிக்கவில்லையென்றும் சென்னையில் வெளியிட்ட ஓர் அறிக்கையில் திரு. கருணாநிதி குற்றம் சாட்டினார்.

## ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் சின்னத்தம்பி சிவபாதம்

(சீமெந்து கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை) ஜூனியேர இயந்திர இயக்குநர்

மலர்வு: 01-08-1934 உதிர்வு: 07-01-1991

திதி: 11—01—1992

பாசத்தின் உறைவிடமே பண்பின் பிறப்பிடமே
எங்களின் வழிகாட்டியே அப்பா
ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு ஒழியாது
பல ஆண்டுகள் சென்றாலும் உங்கள்பாசம் மறவாது:
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி: மங்கையர்க்கரசி.
பிள்ளைகள்: சந்தானகோபால் கந்ததாசன், கௌரி, நளினி, சுமதி.
மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

வள்ளியம்மன் கோவிலடி,
சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம். (சி-5847)

# தமிழீழத்தில் பெண்கள் மீது துன்புறுத்தல் விடுதலைப் புலிகள் மன்னிக்கமாட்டார்கள்''

## காவல்துறை நடேசன் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

''தமிழீழ மண்ணை எதிரியிடமிருந்து பாதுகாப்பதற்காக, தமது இன்ப, துன்பங்களைத் துறந்து, பெண்கள் ஆயுதம் ஏந்திப் போராடி வரும் இன்றைய காலகட்டத்தில், பெண்கள் ஆண்களால் துன்புறுத்தப்படுவதை விடுதலைப் புலிகள் ஒருபோதும் மன்னிக்கமாட்டார்கள் ''

இவ்வாறு தமிழீழக் காவல்துறைப் பொறுப்பதிகாரி திரு. நடேசன் தெரிவித்துள்ளார்.

''அண்மைக் காலங்களில் குறிப்பாக இளம் யுவதிகள், ஆண்களால் துன்புறுத்தப்படுவதும், வீதிகளில் வைத்து அவர்கள் தாக்கப்படுவதும் அதிகரித்துவருகிறது, இதைத் தமிழீழக் காவல்துறை ஒருபோதும் அனுமதிக்கமாட்டாது. இவ்வாறு பெண்களைத் துன்புறுத்திய பலர் தற்போது எமது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

''தமிழீழத்தில் பெண்கள் இரவிலோ அல்லது பகலிலோ எதுவித அச்சமுமின்றி நடமாடிவருகின்ற இக்காலகட்டத்தில், சில ஆண்களினால் அவர்கள் துன்புறுத்தப்படுவது வேதனைக்குரிய செயலாகும்.

''பல யுவதிகள் இளைஞர்களினால் ஏமாற்றப்பட்டு வருகின்றனர். சில பெண்கள் தாய்மை அடைந்தவுடன் ஆண்களால் புறக்கணிக்கப்படுகின்றனர்; இவ்வாறான ஆண்கள் மீது நாம் கடுமையான நடவடிக்கை எடுத்தே தீருவோம்;

''சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாப்பதற்காகவே காவல்துறை ஆரம்பிக்கப்பட்டது; இதை மீறுபவர்கள் யாராக இருந்தாலும் பாரபட்சமற்ற முறையில் நடவடிக்கைகள் எடுத்துவருகிறோம்;

''எமது காவல்துறை ஆரம்பிக்கப்பட்ட பின்னர், வீதி ஒழுங்கு முறைகளைப் பொது மக்கள் சரியாகப் பேணிவருகின்றனர். இதனால் வீதி விபத்துக்கள் தற்போது கூடியளவு தவிர்க்கப்பட்டுள்ளன

''திருட்டுச் சம்பவங்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

## இராசி பலன்

11-01-1992
சனிக்கிழமை
(தமிழுக்கு மார்கழி 27)

சஷ்டி பிற்பகல் 5-13 வரை, உத்தரட்டாதி இரவு 6-19 வரை, சித்தயோகம், இராகு காலம் காலை 9-33 முதல் 11-03 வரை, சுபநேரம் மாலை 3-33 முதல் 5-03 வரை, சஷ்டி விரதம், கெர்ப்போட்ட முடிவு.

மேடம்: அலட்சியப்போக்கு, அபிப்பிராயபேதம், சங்கடம்;

இடபம்: நற்செய்தி, பணவரவு, வெற்றி வாய்ப்பு;

மிதுனம்: மனத் துணிச்சல், குடும்ப மகிழ்ச்சி, தொழில் முன்னேற்றம்.

கடகம்: சங்கடங்களைச் சமாளித்தல், தொழில் நெருக்கம், பணவரவு.

சிங்கம்: தொழில் மந்தம், வீண் விரயம், நெருக்கடியான சூழ்நிலை:

கன்னி; பிறர் அனுகூலம், தொழில் சிறப்பு, தெய்வ சித்தனை;

துலாம்: வாக்கு வன்மை, காரிய சித்தி, மனமாற்றம்.

விருச்சிகம்: கருத்து மோதல், அநாவசியப் பிரச்னை, அலைச்சல்.

தனுசு: எண்ணங்கள் நிறைவேறுமை, வைத்தியச் செலவு, முன்யோசனை.

மகரம்: நிர்வாகத் திறமை, மனத் திருப்தி, குடும்ப மகிழ்ச்சி.

கும்பம்: காணித் தகராறு, பெண் சங்கடம், விதண்டாவாதம்.

மீனம்: நண்பர்கள் உறவு, பொதுப் பணி, தொழில் அதிர்ஷ்டம்.

— ஜோஸ்யர்

## தமிழீழ காவல் துறை வெற்றிடங்கள்

01. சாரதி (வாகனம் செலுத்துபவர்) / மெக்கானிக்
இலேசான பாரமான வாகனங்கள்

கல்வித்தகைமை: 8-ம் வகுப்பு சித்தி
வயது: 18 — 40 வரை

அனுபவமுள்ளவர்கள் சான்றிதழ்களுடனும், வாகனம் செலுத்தும் அத்தாட்சிப் பத்திரங்களுடனும் 13-1-92 திங்கள் காலை 9-00 மணிக்கு நாவலர் வீதியில் உள்ள தமிழீழ காவல்துறையின் தலைமைச் செயலகத்திற்கு நேரில் வரவும்;

02. காவலர் (பொலிஸ்) / சிறைக்காவலர்

கல்வி: 8-ம் வகுப்பு சித்தி
வயது: 18 — 30 வரை
உயரம்: 5 அடி 6 அங்;

சான்றிதழ்களுடன் 13-1-92 திங்கள் காலை 9-00 மணிக்கு நாவலர் வீதியில் உள்ள தமிழீழ காவல் துறையின் தலைமைச் செயலகத்திற்கு நேரில் வரவும். ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்; ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லை;

பொறுப்பாளர்,
தமிழீழ காவல் துறை;

(ஏ-1849)

## யாழ்ப்பாண மாநகரசபை வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 1992

பின்வரும் பொருட்களை வழங்குவதற்கு யாழ்ப்பாண மாநகர சபையுடன் பதிவு செய்துகொள்ள விரும்பும் வழங்குநர்கள், ஒப்பந்தகாரர்கள், உற்பத்தியாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன;

கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு பதிவுக் கட்டணத்திற்கான காசோலையை அல்லது காசுக்கட்டளையை 'ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்' என்ற பெயருக்கு எழுதி அதனை விண்ணப்பத்துடன் சேர்த்து 10-02-1992 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக எனக்கு அனுப்புதல் வேண்டும். அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் 1992'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

| | பொருட்களின் விபரம் | | மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணம் |
|---|---|---|---|
| 01. | எழுது கருவிகள் | — | 100-00 |
| 02. | அச்சிட்ட படிவங்கள் பத்திரங்கள் | — | 100-00 |
| 03. | சௌக்கிய சேவைப் பொருட்கள் | — | 100-00 |
| 04. | பிரசவ விடுதிக்கு வேண்டிய நாட்டுமருந்துகள் | — | 100-00 |
| 05. | மரப் பலகைகள் | — | 100-00 |
| 06. | தண்ணீர் மானிகள் | — | 100-00 |
| 07. | பி. வி. சி. குழாய் பொருத்திகள் | — | 100-00 |
| 08. | ஜி. ஐ. குழாய்கள் பொருத்திகள் | — | 100-00 |
| 09. | இரும்புக் கம்பிகள் | — | 100-00 |
| 10. | இரும்புச்சாமான்கள் | — | 100-00 |
| 11. | பெயின்ற் வகைகள் | — | 100 00 |
| 12. | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் | — | 100-00 |
| 13. | மின்சாரப் பொருட்கள் | — | 500-00 |
| 14. | ஆயுர்வேத மருந்து வகைகள் | — | 100-00 |

குறிப்பிட்ட காலஎல்லைக்குள் பொருட்களை வழங்கத் தவறும் அல்லது மாதிரிக்கு அமைய வழங்கத்தவறும் வழங்குநர்களின் பதிவுகள் எவ்வித அறிவித்தலுமின்றி பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யப்படும்;

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்;

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்; 09-01-92

(எ 1851)

# கருணாநிதியை கைது செய்ய வேண்டாம்

# நரசிம்மராவ் ஜெயலலிதாவுக்கு நிபந்தனை

## தமிழகத்தில் பழிவாங்கும் அரசியல்

### 'இந்தியா ருடே' தகவல்

(புதுடில்லி)

தி. மு. க. தலைவர் திரு: கருணாநிதியை அவசரப்பட்டு கைது செய்யக்கூடாதென இந்தியப் பிரதமர் திரு பி வி நரசிம்மராவ் தமிழகமுதல்வர் ஜெயலலிதாவுக்கு நிபந்தனை விதித்துள்ளார்.

இத்தகவலைத் தெரிவித்த 'இந்தியா ருடே' மேலும் தெரிவிக்கையில்; கடந்தவருட பிற்பகுதியில் முதல்வர் ஜெயலலிதா பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்து 45 நிமிடங்கள் தனியாகப் பேசினார்.

இதன்போது அவர் தனது பாதுகாப்பு குறித்தே பெருமளவுநேரம் பேசினார். தனக்கு தேசிய பாதுகாப்பு படையின் (கறுப்பு பூனைகள்) பாதுகாப்பு தொடரவேண்டுமென பிரதமரை வற்புறுத்தினார். அதற்கு உடன்பட்ட பிரதமர் தி: மு க தலைவர் கருணாநிதியை அவசரப்பட்டு கைது செய்யக்கூடாதென நிபந்தனை விதித்தார்.

கருணாநிதி இவற்றை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தாலும் தி: மு க குற்றவாளிக் கூண்டில் தள்ளப்பட்டுள்ளது: முன்னாள் உள்துறைச்செயலர் நாகராஜனால் சுட்டிக்காட்டப்பட்டவர்களில், கருணாநிதியின் மகன் மு.க. அழகிரி. முன்னாள் அமைச்சர் முரசொலி மாறன், முன்னாள் அமைச்சர்களான சுப்புலக்ஷ்மி ஜெகதீசன், தங்கவேலு, சுந்தரம், முன்னாள் தலைமைச்செயலர் ராஜேந்திரன் ஆகியோர் எவ்வேளையிலும் கைது செய்யப்படலாம்,

நெருக்கடியினால் தி மு க. தளர்ந்து வருகிறது. கட்சி மேலிடம் வை. கோபாலசாமியைப் பலிக்கடாவாகப்பயன்படுத்தும் என்று கட்சி வட்டாரங்கள் கருதுகின்றன இவரது சகோதரர் ரவிச்சந்திரன் கைது செய்யப்பட்டுள்ளார். தி. மு. க. முன்னாள் அமைச்சர்கள் ஜெயலலிதாவின் கெடுபிடியிலிருந்து தப்பிக்க அ. தி மு. க. வில் சேரலாம்

'தடா' சட்டத்தை தவறாக பயன்படுத்துவதாக கருணாநிதி கூறும் கண்டனங்களுக்கு, பழக்கறிஞர் தரப்பிலிருந்து பெரும் ஆதரவு கிடைத்துள்ளது புலிகளுக்கு ஆதரவாக வாதிட்டதற்காகவே வழக்கறிஞர் வீரசேகரன் கைதானார்.

ஏற்கனவே தடுமாறிக் கொண்டிருக்கும் தி. மு, க. தலைவரை வீழ்த்துவதில் ஜெயலலிதா உறுதியாக இருக்கிறார். கருணாநிதியிடம் பணிபுரிந்த அரசு அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், கட்சிப் பெரும்புள்ளிகள் என்று பலரையும் கைது செய்ய தமிழக அரசு பட்டியல் போட்டுவருகிறது.

புலிகள் தமிழ்நாட்டைத் தங்கள் குகையாக மாற்ற கருணாநிதியே முக்கிய காரணமென நாகராஜன் கூறியுள்ளார். இவர் அரசுதரப்பு சாட்சியாக மாறினால் கருணாநிதியின் கைது பெருமளவில் உறுதியாகும்: இது நடக்கும் சாத்தியம் அதிகரித்து வருகிறது.

கருணாநிதிக்கு எதிரான சாட்சியம் தங்களிடம் இருந்தாலும் இந்தச் சூழ்நிலையில் அவர் கைது செய்யப்பட்டால் அவர் தியாகியாகக்கூடுமென எண்ணும் ஜெயலலிதா பத்திரிகைகளினதும், பொதுமக்களினதும் தாக்குதல் மூலம் அவரை அவமானப்படுத்த நினைக்கிறார்.

ராஜீவ் காந்தியின் கொலையுடன் கருணாநிதியை எல்லோரும் சம்பந்தப்படுத்துகிறார்கள்; ஆனால் கருணாநிதி மீதான குற்றச்சாட்டுகளை எடுபடுமோ என்பதோ ஜெயலலிதாவின் புதிய தாக்குதல் பழிவாங்கும் அரசியலாகத் தோன்றுகிறது;

புலிகளுக்கு ஆதரவாக ஜெயலலிதா பல சந்தர்ப்பங்களில் செயல்பட்டதைக் கருணாநிதி சுட்டிக்காட்டியுள்ளார்,

எது எப்படியோ இலங்கை தமிழ் போராளிகள் தமிழகத்தில் வளர கடந்த ஐந்து ஆண்டுகளில் காங்கிரஸ், அ. தி. மு. க., தி. மு க., ராஜீவ் காந்தி, எம். ஜி ஆர்; கருணாநிதியின் பங்கு கணிசமான அளவு உள்ளது. யாருடைய பங்கு மற்றவர்களின் பங்கைவிட அதிகமென்று சொல்வது கடினமென்றும் 'இந்தியா ருடே' கூறியுள்ளது. (சி)

## "சுயநிர்ணய உரிமை வழங்காவிடில் தமிழர் பிரிவதை தடுக்க முடியாது"

### வாசுதேவா எச்சரிக்கை

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் பெரும் போருக்கான ஏற்பாடுகள் நடக்கின்றன. நடந்து கொண்டுமிருக்கின்றன. இத்தருணத்தில் அமைச்சர் தொண்டமான் சமாதான யோசனையொன்றை முன்வைத்துள்ளார். இந்த யோசனையை நவசமாஜக் கட்சி ஒன்றே வெளிப்படையாக ஆதரித்துள்ளது.

இது விடயமாக இக்கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்காரவை பத்திரிகையாளர் சந்தித்து கேட்ட கேள்விகளும் பதிலும் கீழே தரப்படுகின்றன.

கேள்வி: திரு. தொண்டமானின் யோசனையை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள?

பதில்: எந்த ஒரு சமாதான தீர்விலும் தமிழர்களுக்கான சுயநிர்ண உரிமை சேர்க்கப்பட வேண்டும். இந்த தேவையற்ற சண்டையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் சகலரும் வெகுவாக பாதிப்படைந்துவிட்டனர். ஆகவே இந்தப் போர் நிறுத்தப்படவேண்டும். அரசும் பெரும்பான்மை சமூகமும் சிறுபான்மையினரின் மனதையும் வெல்லவேண்டும். இதற்கு பிரதேச சுயாட்சி முறை நல்ல செயலாகும்; திரு தொண்டமானும் இந்த வடிவில் அணுகியதால் அதை ஏற்காமல் விடமுடியாது.

#### சுயாட்சியால் பிரச்சனை தீருமா?

கே; பிரதேசசுயாட்சிமுறை நல்லதென சொல்கிறீர்கள். ஆனால் இதே நடைமுறையில் தமிழ்நாடு, கர்நாடகமாநிலங்களில் காவேரி நீர்ப்பிரச்னை பெரும் பிரச்னையைகொண்டு வந்துள்ளதே

ப: சமஷ்டி ஆட்சி அல்லது பிரதேச சுயாட்சி எல்லாம் பூரணமாக சரியாக இருக்கும் என்று சொல்லமுடியவில்லை. இருந்தும் வடக்கு, கிழக்கில் தற்போது நடைபெறுவது போல் பாரதூரமானதாக வராது. சுயாட்சி வழங்கிய பின் இவையெல்லாம் தீர்க்கக் கூடியவை. முதலில் போர் ஓய வேண்டும்;

கே: சுயாட்சி பிரிந்து செல்வதற்கான அடித்தளமாக அமையாதா?

ப: அது தேவையற்றபயமே மக்களை பலாத்காரம் மூலம் ஒன்றிணைக்க முடியாது. முதலில் சுயநிர்ணய உரிமை தமிழருக்கு வழங்கவேண்டும். அவர்கள் ஒன்றாக இருப்பதால் வரும் பயனை உணர்ந்து வளங்களையும் பயன்படுத்தி ஒற்றுமைப்படுவர். ஐயுறவு பயம் நீக்கப்பட்டதும் எதிர் உணர்வு நீங்கி பெரும்பான்மையினருக்கு எதிரான போராட்டங்களும் நின்றுவிடும்; தானாக ஒற்றுமைப்படுதல் பலமானதாக அமையும்.

கே: சுயநிர்ணயமென்பது பிரிந்து செல்லவும் உரிமையுண்டு. தமிழர் பிரிந்துசெல்ல தீர்மானித்தால்?

#### எப்படி பிரிவார்கள்?

ப: சுயநிர்ணய உரிமை வழங்காவிடிலும் பிரிந்து செல்ல அவர்கள் தீர்மானிப்பர். அது தடுக்க முடியாது; அப்படியாயின் கொடுத்தாலென்ன கொடுக்காமல் விட்டாலென்ன பிரிந்துசெல்ல வழிகோலிவிடும்; உதாரணம் ரஷ்யாவில் வலுக்கட்டாயமாக இணைந்த நாடுகள்பிரிந்து சென்றுவிட்டன, ஒற்றுமை என்பது சட்டத்தின் பேரில் வருவதல்ல. புரிந்துணர்வில் ஏற்படவேண்டும். அதை நாம் முதலில் செய்வோமாக.

கே; உங்களையும் உங்கள் கட்சியையும் தீவிர சிங்கள பௌத்தர்கள் எதிர்ப்பார்களே?

ப: ஆனால் அதற்காக இதற்கு மாற்று வழி என்ன! சண்டையை நிறுத்த அவர்கள் செய்தது என்ன? அவர்கள் இவ்வாறு நிற்பதால் பிரிந்து செல்வதற்குவழிகோலிவிடுகிறார்கள், சிறுபான்மை மக்களின் உரிமை கொடுக்காமல் விடுவதால் மேலும் ஆயுதம் ஏந்தி இழந்த உரிமையை பெற போராட்டம் தொடரும்.

கே; இணைப்பை ஏற்படுத்த மக்கள் ஆணை தேவையில்லையா?

பதில்: தேவையில்லை; மக்கள் ஆணை சமாதானத்தை கொண்டுவராது. சண்டையையும் நிறுத்தாது.

கே: இந்த இனப்பிரச்சனை தோன்றி வளர்ந்த காரணம் பற்றி கூறுவீர்களா?

ப: முன்னைய தலைவர்கள் செய்த தவறுதான் காரணம். கொல்வின் ஆர். டி; சில்வா ஒருதரம் சொன்னார். இரண்டு மொழி ஒரு ஆட்சி, ஒருமொழி இரண்டு ஆட்சி என்று. தற்போது நாம் அதன் பலனைக் கண்ணால் காண்கிறோம். சிங்கள ஸ்ரீ கொண்டு வந்த போது ரத்தக்களரியும் எதிர்ப்பும் ஏற்படுத்தப்பட்டது தற்போது அது ஒரு மடமைக் கொள்கையாக உணரப்பட்டுவிட்டது; 40 வருடங்களுக்கு முன் கொண்டு வந்த சட்டங்கள் மூடக்கொள்கையாக தற்போது உணரப்படுவதுபோல, தற்போதைய சம்பவங்களும் இன்னும் 40 வருடம் கழித்து உணரவேண்டிவரும், அது பஸ்சை தவறவிட்டது போலாகிவிடும். அதனால் தான் சமாதான விரும்பிகளை நாட்டை அழிவிலிருந்து காப்பாற்ற எதையும் நன்றே செய்வோம் அதை இன்றே செய்வோமாக என்று கேட்டுக் கொள்கிறோம். (கே)

## புலிகளால் மாத்திரமன்றி சிறுத்தைகளாலும் பிரச்னை

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஹபரன கந்தளாய் காட்டுப் பகுதிகளில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தினர் புலிகளை மாத்திரமல்லாமல் சிறுத்தைகளையும் எதிர்கொள்ளவேண்டிய நிலையில் உள்ளனராம்.

ஹபரன கந்தளாய் பகுதிகளுக்கு இடைப்பட்ட காட்டுப் பகுதியிலுள்ள ரயில் பாதையில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடும்போது அடிக்கடி சிறுத்தைகள் வந்து குறுக்கிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. காடுகளிலிருந்து இரைதேடி இந்தச் சிறுத்தைகள் ரயில் பாதைகளைக் கடந்து போகும்போதே ராணுவத்தினரின் கண்களில் அடிக்கடி தென்படுகின்றனவாம்.

# 'கோணேசர்' தர்மகர்த்தா சபையில்

# மூன்று பௌத்த பிக்குகள் அங்கம்

## நகரை சுற்றி மாத்திரமே தமிழர்கள்

(திருமலை)

திருமலை கோணேசர் ஆலய தர்மகர்த்தா சபையில் மூன்று பௌத்த பிக்குகள் அங்கம் வகிக்கிறார்கள். மூன்று குருக்களும் வெளியார் மூவரும் இதில் அங்கம் வகிக்கிறார்கள்,

வில்லூண்டி கந்தசாமி கோவில், முத்துக்குமாரசாமி கோவில். பிள்ளையார் கோவில். காளி கோவில் ஆகிய ஆலயங்களை தவிர ஏனைய பல கோவில்கள் சிதைந்த நிலையிலும், பூசைகள் இன்றியும் காணப்படுகின்றன.

இவ்வாறு திருகோணமலையில் இருந்து வந்த ஒருவர் தெரிவித்தார்: அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது,

திருகோணமலையில் பல இராணுவ முகாம்கள் இருந்த போதிலும் திருகோணமலை நகரைத் தவிர மூன்று மைல் பிரதேசத்துக்கு அப்பால் யாரும் விலேச, இரவிலோ இராணுவம் செல்வது இல்லை.

கன்னியாய், திரியாய், குச்சவெளி, புறுப்பிட்டி போன்ற இடங்களில் தமிழ் மக்கள் இல்லை. அவர்கள் எல்லோரும் அகதியாக திருகோணமலை நகருக்குள் வந்துள்ளார்கள்,

இந்தப் பிரதேசங்களில் சிறு இராணுவமுகாம்களிலிருந்தும் பன்குளம், மொரவெவ பகுதிகளிலும் இராணுவ நடமாட்டங்கள் இல்லை, முகாம்களில் தான் இருக்கிறார்கள்.

தோப்பூர், மூதூர், கந்தளாய், தம்பலகாமம் போன்ற இடங்களில் உள்ள தமிழ் மக்களும் இடம்பெயர்ந்து திருகோணமலை நகருக்குள் அகதிகளாக இருக்கிறார்கள். இவர்கள் முகாம்களில் தங்காது தமது உறவினர், தெரிந்தவர்கள் வீடுகளில் இருக்கிறார்கள்.

பண்பாக நடந்து கொள்ளும் சிங்கள மக்கள் தங்கள் வீடுகளை விற்றுவிட்டுச் செல்கிறார்கள் அடாத்தாக நடக்கும் பெரும்பான்மையின மக்கள் சிலர் அத்துமீறி, தமிழர் வீடுகளில் தங்கியும் உள்ளார்கள். அநேக வீடுகளில் யன்னல்கள், கதவுகள், வீட்டுத் தளபாடப் பொருட்கள் போன்ற உபகரணங்களை எடுத்துக் கொண்டு சென்றதினால், வீடுகள் எல்லாம் இடிபாடுள்ள நிலையில் காட்சியளிப்பதைக் காணலாம்.

கொழும்பில் இருந்து காலை 5-05 மணிக்கு புறப்பட்டு 12-00 மணிக்கு வரும் புகைரதத்தில் அநேகமாக பெரும்பான்மையின மக்கள் திருகோணமலை வந்து போகிறார்கள்.

திருகோணமலையில் கடற்றொழில் அமைச்சு இயங்கி வருவதால் மீன்பிடியைக் காரணமாகக் கொண்டு பல சிங்கள மக்கள் திருகோணமலையில் குடியேறும் வாய்ப்பு இருக்கிறது.

ஒட்டுமொத்தமாக பார்க்கப்போனால் தமிழ்மக்கள் நகரைச் சுற்றி மூன்று மைல் பிரதேசத்துக்குள்தான் வசிக்கிறார்கள். (152)

## காங்கேசன்துறை துறைமுகத்தில்

# பொருள்களை இறக்கும் வேலை இருவாரத்தில் பூர்த்தியாகும்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் வரும் உணவுப் பொருட்களை காங்கேசன்துறை துறைமுகத்தில் இறக்கி யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவருவதற்கான ஏற்பாடுகள் இன்னும் இருவாரங்களில் பூர்த்தியாகுமென்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான முயற்சிகளில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மும்முரமாக ஈடுபட்டுவருகிறது.

விடுதலைப் புலிகளுடனும் அரசதிபருடனும் இதுசம்பந்தமான பேச்சுவார்த்தைகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்டுவருவது குறிப்பிடத்தக்கது. (மா)

### பிரிட்டிஷ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துடன் வெடித்தது.

அதிர்ஷ்டவசமாக எவருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை என்றும் அனுராதபுர நிலையில் நிறுத்தப்பட்ட கார் ஒன்றில் வைக்கப்பட்ட வெடிகுண்டே இவ்வாறு வெடித்தது எனவும் தெரிவிக்கப்பட்டது.

குண்டுவெடிப்புத் தொடர்பான விசாரணைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறதாயினும் இதுவரையில் எவரும் கைது செய்யப்பட்டதாக தகவல் இல்லை எனவும் அறிவிக்கப்பட்டது. (க)

### தமிழீழத்தில்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

குறைந்துள்ளன. திட்டமிட்டுப் பல காலமாகத் திருட்டுக்களை மிகச் சாதுரியமாகச் செய்துவந்த திருட்டுக் கும்பல்களை எமது காவல்துறையினர் கைதுசெய்துள்ளனர். இவர்களைப் பற்றிய முழு விபரங்களையும் பொதுமக்களுக்கு மிக விரைவில் தெரியப்படுத்துவோம்'' என்றும் திரு. நடேசன் மேலும் தெரிவித்தார். (வி)

### தமிழ் இளைஞர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீரக்கோன் தலைமையில் இம்மாநாடு இடம்பெறவிருக்கிறது. (மா)

### புலிகளுடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. கே. பி. சில்வா தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

இனப்பிரச்சினை குறித்து ஆராய நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு தொண்டமான் சமர்ப்பித்துள்ள யோசனைகள் ஆராயப்படவேண்டும். இதற்குரிய சந்தர்ப்பமும் வழங்கப்படவேண்டும். அத்துடன் புலிகளின் நிலைபற்றி அமைச்சர் தொண்டமான் அறிந்து கொள்வதும் தப்பானதல்ல.

### அகதிகளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிட்டிருப்பதாவது:

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள அகதிமுகாம்களில் வாழமுடியாத நிலையில் இடம்பெயர்ந்தவர்கள் உறவினர்கள், நண்பர்கள் போன்றோரின் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளார்கள்.

இவர்களுக்கு நிவாரணம் வழங்குவதில்லை என்று புனர்வாழ்வுஅமைச்சர் பி. தயாரத்தின நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டது நியாயமற்ற செயலோடு ஒரு மனிதஉரிமை மீறலாகும். (152)


## சுகாதார திணைக்களம், யாழ்ப்பாணம்.

# கேள்விப்பத்திர அறிவித்தல்

கீழ்க்காணும் அளவுகளைக் கொண்ட 20 (இருபது) மரப்பெட்டிகள் தயாரித்து வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் 16-1-92-ம் திகதி பகல் 12-00 மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| நீளம் | — | 4 அடி |
| அகலம் | — | 3 அடி |
| உயரம் | — | 2 அடி |

இப்பெட்டிகள் மூடிகளுடன் பிணைச்சல்களும், பிடிகளைக் கொண்டிப்பட்டங்களும் உள்ளனவாக இருத்தல் வேண்டும். அத்துடன் உறுதியான பாரங்குறைந்த 1 அங்குல தடிப்புள்ள பலகையினால் செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப்பத்திரகாரர் ஒரு கிழமைக்குள் மேற்கூறிய 20 பெட்டிகளையும் திருப்தியான முறையில் தயாரித்து வழங்கவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்குமுன் மேலும் விபரங்களுக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் 14-1-92-ம் திகதி பிற்பகல் 2-00 மணியளவில் தொடர்பு கொள்ளவும்.

டாக்டர் ந. கனகசபை,
யாழ். பிராந்திய
சுகாதார சேவைகள்
பணிப்பாளர்.

59, விக்ரோரியா வீதி,
யாழ்ப்பாணம்.
10-1-92.

(ஏ-1852)


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஜனவரி மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registerd as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81.

### வயதெல்லை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லாம்.

இதற்கான போட்டிப்பரீட்சை நடத்தப்படவிருக்கிறது.

இம்மாதம் 20-ந் திகதி வரை விண்ணப்பங்கள் பரீட்சை ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்படவிருக்கிறது. (மா)

### பொன்னாலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டன் காயமடைந்த இராணுவத்தினரை தூக்கிக்கொண்டு மற்றைய இராணுவத்தினர் முகாமுக்குள் தப்பிஓடி விட்டதாகவும் கூறப்படுகிறது.

### மீட்கப்பட்ட ஆயுதங்கள்

மேற்படி காவலரண் தகர்ப்பின்போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட நவீன ரக ஆயுதங்களின் விபரம் வருமாறு:

ரி 69 ஆர். பி. ஜி. - 1, ஏ. கே. எல். எம் ஜி. துப்பாக்கிகள் - 2, 60 மி. மீற்றர் மோட்டார் - 1, ரி 81 ஒரு ரக துப்பாக்கி - 3, ரி 56 இரண்டு ரக துப்பாக்கிகள் - 2, ரி 56 பட்மொட்டல் துப்பாக்கிகள் - 2, ஏ. கே. எல். எம். ஜி. க்குரிய ரவைத் தொடர்கள் 868, 60மி. மீற்றர் எறிகணைகள் - 20, 60 மி. மீற்றர் கேஸ் - 1, ஆர். பி. ஜி. பிளப்பர் - 3, ஆர். பி. ஜி. எறிகணைகள் - 6, ரி. 81 ஒரு ரக துப்பாக்கிக்குரிய ரவைக்கூடுகள் - 5, கிளைக் காட்றிஜ் 4, கிளைக் கைத்துப்பாக்கி 1, ஏ. கே. துப்பாக்கிக்குரிய ரவைக்கூடுகள் - 18, றம மகஸீன் - 9, 7.6 நடுத்தர ரவைகள் 1950, ஜே. ஆர். கைக்குண்டுகள் - 16, தொலைநோக்கிக் கருவி - 1, தொலைத் தொடர்பு கருவி - 1. (ஸ)

### பூநகரியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சானந்தம் தலைமையில் இச்சங்கத் தூதுக் குழுவொன்று நேற்றுக்காலை யாழ். செயலகத்தில் அரச அதிபரைச் சந்தித்து இதுதொடர்பான பேச்சுவார்த்தை நடத்தியது.

பூநகரி ஆலடிப் பகுதியில் 60க்கு மேற்பட்ட லொறிகள் கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட உணவுப் பொருட்களுடன் சிக்குண்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. (மா)

### தேசத்துரோக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மலை பத்திரிகையாளர் மத்தியில் மேற்படி தகவலை வெளியிட்டார்.

இதுபற்றி அவர் மேலும் விளக்கமளிக்கையில்:- ''எமது போராட்டத்தை ஆரம்ப காலத்திலிருந்து இன்று வரை இவர்கள் காட்டிக்கொடுப்பதுடன், தடைக்கலமாகவும் இருந்து வருகின்றார்கள். இவர்களை இனம்கண்டு தண்டனை வழங்கவேண்டியது எமது கடமை.

முன்னாள் யாழ். மேயர் துரையப்பாவுக்கு விடுதலைப் புலிகள் வழங்கிய மரண தண்டனையின்பின்பு எமது இயக்க உறுப்பினர்களை காட்டிக்கொடுப்பதில் முன்னின்ற முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் தாமோதரம்பிள்ளை, முன்னாள் உதவி மேயர் பேரின்பநாயகம், மயிலிட்டியைச் சேர்ந்த செல்லையா ஆகிய மூவரையும் நாம் தற்போது கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றோம் என்று கூறினார். (வி)

### இந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களின் நடவடிக்கை எவ்வாறு இருந்தது என்பது சகலருக்கும் தெரியும். இதற்கு அவ்வக் காலப்பகுதியிலிருந்த மாநில அரசுகள் அனுமதியளித்தன என்பதை பார்த்தால் இன்றைய நிலை தெளிவாகப் புரியும்.

### புல்ஜன்சை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க பற்றி உரையாற்றக்கூடாது என்று தெரிவித்தார்கள்.

### வடக்கு-கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

26 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட மேற்படி மாநாட்டில் ஐந்து பேர் கொண்ட இலங்கைக் குழுவுக்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவர் திரு. மங்கள முனசிங்கா தலைமை தாங்கினார். (வி)

### பலாலி-காரைநகர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதல்களினால் பல வீடுகள் சேதமடைந்தன.

இப்பகுதியிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்ததையும் காணக்கூடியதாக இருந்தது. (56)

### சிவில் விமானங்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வனம் ஒன்றிடம் 768 ரக அவ்ரோ விமானம் ஒன்றைக் கொள்வனவு செய்ததாகவும் இவ்விமானம் இராணுவம் அல்லாத விமானம் ஆதலால் பிரிட்டன் இலங்கைக்கு போர் தளபாடம் வழங்குவதில்லையென்ற வரையறைக்குள் இவ்விமானவிற்பனை அடங்கமாட்டாது எனவும் பிரிட்டன் உயர் அதிகாரி ஒருவர் கருத்துவெளியிட்டுள்ளார்.

### ஷெல் வீச்சில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது மரணமானார். (56)

## மரண அறிவித்தல்

### திரு. மூ. சுப்பையா

(London Chamber of Commerce)

உடுவில் கிழக்கு அம்பலவாணர் வீதியைச்சேர்ந்த திரு. மூத்தாம்பி சுப்பையா இளைப்பாறிய ஆசிரியர் (முன்னாள் கனகரத்தினம் மகாவித்தியாலய ஆசிரியரும், தொழில் நுட்பக் கல்லூரி வர்த்தக விரிவுரையாளரும்) 10-1-92ல் காலமானார். அன்னாரின் சமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று 11-2 1992ல் மருதனார்மடம், பூவோடை மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மருமகன் செ. பாலசுப்பிரமணியம்
மருமகள் திருமதி புஸ்பராணி இராசையா
(இ-5850)

### செல்லையா தங்கம்மா

நல்லூர், 50/20, செட்டித் தெருவைச் சேர்ந்த செல்லையா தங்கம்மா காலமானார். இவர் காலம் சென்ற செல்லையா (அப்புச்சி) அவர்களின் அன்பு மனைவியும், காலம்சென்ற இருபாலையைச் சேர்ந்த வே. செல்லையாவின் அன்புச் சகோதரியும், லீலாவதி வரதராஜா (மின்சாரப் பகுதி மன்னார் பிரதேசம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சண்முகநாதன், ராகேஸ்வரி ஆகியோரின் மாமியாரும், சிவதாஸ் (சவுதி அரேபியா), யோகராஜா (ஆனந்தி) (சிவானந்தா கபே, நல்லூர்), இந்திராணி, றஞ்சினி, ஜெயதாஸ், குமாரதாஸ் (கண்ணன்) (நீர் விநியோகப் பகுதி, யாழ். மாநகர சபை), இராசமணி, மனோகரன் (லங்கா சிமெந்து நிறுவனம்), ஸ்ரீகாந்தன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், சர்மிளா, சர்மிலி, சஞ்ஜீர், சஞ்சித், மயூரன், செந்தூரன், அர்ச்சனா, நிருஜலா ஆகியோரின் அன்புப் பூட்டியும், இருபாலையைச் சேர்ந்த இராசம்மாவின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 11-1-92 சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. யோகராஜா (ஆனந்தி)
சிவானந்தா கபே, நல்லூர்.
(இ-5851)

### திருமதி மங்கையற்கரசி ஆறுமுகம்

மல்லாகம்

திருமதி மங்கையற்கரசி ஆறுமுகம் 10-01-92ல் காலமானார். இவர் காலம்சென்ற ஆறுமுகத்தின் (இளைப்பாறிய லிகிதர்) அன்பு மனைவியும், காலம் சென்ற Dr. சொக்கலிங்கம் (மலேசியா), காலம்சென்ற கேசவன் (முன்னாள் ப. நோ. கூட்டுறவுச் சங்கம், சுன்னாகம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுந்தரலிங்கம் [கனடா], தெய்வநாயகி, Dr. சிவபாதம் (குகன் வைத்தியசாலை, மல்லாகம், கொல்லங்கலட்டி), தம்பாப்பிள்ளை (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேஸ்வரி (கனடா), பாலசுப்பிரமணியம் [இளைப்பாறிய லிகிதர், C T B, கோண்டாவில்], Dr யோகேஸ்வரி (குகன் வைத்தியசாலை, மல்லாகம், கொல்லங்கலட்டி), பத்மராணி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரசாந்தன் (கனடா), கீதா [கனடா], ஞானேந்திரன், குகேந்திரன் (சுவிஸ்), தனேந்திரன், நிரஞ்சினி, சுகந்தினி, மயூரன், சியாமளா, யசோதினி, கோகுலன் [லண்டன்], நிராகுலன் (லண்டன்), சத்தியன் [லண்டன்] ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 10-1-92ல் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்;
Dr. A. சிவபாதம்
குகன் வைத்தியசாலை, மல்லாகம்.
(இ-5852)